# மேட்டுப்பாளையம் நகராட்சி

மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 27.02.2023 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கூட்டப்படவுள்ளது. இக்கூட்டத்திற்கு நகர்மன்றத் துணைத் தலைவர் , நகர்மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்
மேட்டுப்பாளையம் நகராட்சி.

## கூட்டப்பொருள்.

1

மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு நகர மன்ற தீர்மான எண்.345, நாள்.28.06.2022ன்படி 12.01.2022 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. அதில் கீழ்க்கண்ட விவரப்படி அதிக பட்சமாக ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை கோரப்பட்டது.

| வ. எண். | கடைகளின் விவரம் | பெயர் மற்றும் முகவரி | நிர்ணயம் செய்யப்பட்ட முந்தைய வாடகை தொகை | ஏலத்தில் அதிகபட்ச மாக கோரப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1 | அண்ணா வணிக வளாகம் க.எண்.11 | திரு.சோமசுந்தரம், த/பெ.நஞ்சப்பகவுண்டர் , 1/339, காந்தி நகர், பத்திரகாளியம்மன் கோவில் ரோடு, மேட்டுப்பாளையம். | ரூ.10,868/- | ரூ.11.900/- |
| 2 | அண்ணா வணிக வளாகம் க.எண்.27 | திரு. M.ஸ்ரீபதி மல்லீஸ்வரன், த/பெ.திரு.மல்லீஸ்வரன், 2/806, குரும்பனூர் , மேட்டுப்பாளையம். | ரூ.20,815/- | ரூ.22,400/- |

மேற்கண்ட கடைகளுக்கு மாத வாடகை அதிக பட்ச ஏலம் கோரிய மேற்கண்ட நபர்களுக்கு கடை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கும், பின்பு புதுப்பிக்கும் பட்சத்தில் தொடர்ந்து 9 ஆண்டுகள் வரை கடை நடத்திக் கொள்ள உரிமம் வழங்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 211/2022/அ1

தீர்மானம் எண். : 535

தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.

2 மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான சமுதாய கூடங்கள் (Community Hall) கீழ்க்கண்ட விவரப்படி அமைந்துள்ளது.

| வ. எண் | அமைந்து உள்ள இடம் | பயன் பாட்டில் உள்ள விவரம் | எண்ணிக்கை | அளவு ச.அடி | நாள் ஒன்றுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை | நாள் ஒன்றுக்கு மின் கட்டணம் | தூய்மை பணி கட்டணம் | GST |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | குமரபுரம் | – | 1 | 264 | ரூ.500/– | ரூ.100/– | ரூ.100/– | ரூ.90/– |
| 2 | நடூர் AD காலனி | – | 1 | 946 | ரூ.1500/– | ரூ.200/– | ரூ.300/– | ரூ.270 |
| | | | 1 | 252 | ரூ.500/– | ரூ.100/– | ரூ.100/– | ரூ.90/– |
| 3 | காந்திபுரம் | – | 1 | 364 | ரூ.500/– | ரூ.100/– | ரூ.200/– | ரூ.90/– |
| 4 | சங்கர் நகர் | பள்ளி கூடம் வளாகத்தில் உள்ளதால் பள்ளி கூடம் பயன்பாட்டில் உள்ளது | 1 | – | – | – | – | – |
| 5 | S.M. நகர் | அங்கன்வாடி நடைபெறுகிறது | 1 | – | – | – | – | – |
| 6 | கெண்டையூர் | அங்கன்வாடி நடைபெறுகிறது | 1 | – | – | – | – | – |
| 7 | மண்டேலா நகர் | – | 1 | 364 | ரூ.500/– | ரூ.100/– | ரூ.200/– | ரூ.90/– |
| | | மொத்தம் | 8 | | | | | |

மேற்கண்ட 5 சமுதாய கூடங்கள் நாள் ஒன்றுக்கு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந..கஎண்.978/2022/அ1

தீர்மானம் எண். : 536

தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 3 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு நகர மன்ற தீர்மான எண் 345 நாள் 28.06.22ன்படி 14.02.2023 அன்று மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. அதில் கீழ்கண்ட விவரப்படி அதிக பட்சமாக ஏலம்/ஒப்பந்துபுள்ளி தொகை கோரப்பட்டது. |

| வ.எண் | கடைகளின் விவரம் | பெயர் மற்றும் முகவரி | நிர்ணயம் செய்யப்பட்ட முந்தைய வாடகை தொகை | ஏலத்தில் அதிகபட்சமாக கோரப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1. | பீப் கடை (Beef stall) கடை எண் 5 | திரு.சல்மான்பாரீஸ் த/பெ.அப்துல் மாலீக் 16 ராமசாமிநகர், மேட்டுப்பாளையம். | ரூ.2,150/- | ரூ.2,800/- |
| 2. | பீப் கடை (Beef stall) கடை எண் 6 | திரு.ஜிலானி, த/பெ.முகமது யூசுப், 66A அண்ணாஜி ராவ் ரோடு, மேட்டுப்பாளையம். | ரூ.2,100/- | ரூ.2,850/- |
| 3. | பெட்டிகடை கடைஎண்.23 | திரு.அம்ஜத்அலி, த/பெ.முகம்மது இப்ராகிம் 6, தந்தை பெரியார் வீதி தொண்டுப்பட்டிரோடு, மேட்டுப்பாளையம். | ரூ.3,312/- | ரூ.4,300/- |

மேற்கண்ட கடைகளுக்கு உயர்ந்த பட்ச உச்ச கேள்வி கோரி உள்ளதாலும், அரசு நிர்ணயத்த தொகையை விட கூடுதலாக இருப்பதாலும் மேற்படி கடைகளை கோரிய நபர்கள் ஒரு வருட வாடகைத் தொகை செலுத்தப்பட்டவுடன் கடைகளை ஒப்படைக்கும் நாள் முதல் 3 ஆண்டுக்கும், பின்பு புதுப்பிக்கும் பட்சத்தில் தொடர்ந்து 3 ஆண்டுகள் வரை உரிமம் வழங்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.** : 537

**தீர்மானம்** : அங்கீகரிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 4 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு நகர மன்ற தீர்மான எண்.345, நாள்.28.06.2022 ன்படி 12.01.2023 அன்று மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் ஆடுவதை சாலை வசூல் செய்யும் உரிமம் மட்டும் கீழ்க்கண்ட விவரப்படி ஏலத் தொகை கோரப்பட்டது. |

| வ. எண். | குத்தகை விவரம் | பெயர் மற்றும் முகவரி | கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | சென்ற ஆண்டு உரிம தொகை ரூ | மூன்றாண்டு சராசரி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | ஆடுவதை சாலை உரிமம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் | திரு.இதாயத்துல்லா, த/பெ.அமீர் அம்ஜா, 1/4, பிள்ளையார் கோவில் சந்து, சிறுமுகை ரோடு, மேட்டுப்பாளையம். | ரூ.2,07,000/– | ரூ.1,94,040/– | ரூ.1,96,650/– |
| | | திரு. ஆசிக் அகமதி, த/பெ.இதயத்துல்லா, 27, சிறுமுகை ரோடு, மதினா நகர், மேட்டுப்பாளையம். | ரூ.2,06,000/– | | |

மேற்கண்ட உரிம இனத்திற்கு உயர்ந்த பட்ச உச்ச ஏல கேள்வி கோரிய திரு.இதாயத்துல்லா என்பவருக்கு மேற்கண்ட ஆடுவதை சாலை வசூல் செய்து கொள்ளும் உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் ஒர் ஆண்டுக்கும், பின்பு புதுப்பிக்கும் பட்சத்தில் தொடர்ந்து 3 ஆண்டுகள் வரை உரிமம் வழங்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 4618/2020/அ1

**தீர்மானம் எண்.** : 538

**தீர்மானம்** : அங்கீகரிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 5 | இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட கடைகள் நீண்ட காலம் வாடகை செலுத்தாததால் பல முறை அறிவிப்பு அனுப்பப்பட்டும் வாடகை செலுத்தப்படவில்லை. மேலும் பெட்டிக்கடைகள் 3வது 3ஆண்டுகள் புதுப்பிக்கப்பட்ட வேண்டி பல அறிவிப்புகள் அனுப்பப்பட்டும் உரிய காலத்தில் புதுப்பிக்கப்பட முன்வரவில்லை. மேலும் மாட்டிறைச்சி கடைகள் முதலாவது 3 ஆண்டுகள் முடிந்து 2வது மூன்றாண்டுகள் புதுப்பிக்கப்பட வேண்டி அறிவிப்புகள் அனுப்பப்பட்டும் உரிய காலத்தில் புதுப்பிக்கப்படவில்லை. |

| வ.எண். | கடை விவரம் | கடை எண் |
|---|---|---|
| 1 | பெட்டிக்கடை | கடை எண்.6 |
| 2 | பெட்டிக்கடை | கடை எண்.23 |
| 3 | பீப் ஸ்டால் | கடை எண்.5 |
| 4 | பீப் ஸ்டால் | கடை எண்.6 |

எனவே, மேற்கண்ட கடைகள் பூட்டி சீல் வைக்கப்பட்டதால் மறு ஏலத்திற்கு கொண்டு வர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண். : 539

தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.

6 மேட்டுப்பாளையம் நகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள கீழ்க்கண்ட நகராட்சி மேல்நிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளிகளுக்கு நாள்தோறும் "தினகரன் நாளிதழ்" விநியோகம் செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களால் உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே, தினகரன் நாளிதழினை நகராட்சி பள்ளிகளுக்கு நாள்தோறும் விநியோகம் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

பள்ளிகள் விவரம்

1. மணி நகர் நகராட்சி உயர்நிலைப்பள்ளி , மணி நகர்,
2. பகவான் மகாவீர் நகராட்சி உயர்நிலைப்பள்ளி, சங்கர் நகர்,
3. பெண்கள் நகராட்சி மேல்நிலைப்பள்ளி, அண்ணாஜிராவ் ரோடு, மேட்டுப்பாளையம்.

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் ஏற்கலாம்.

ந.கஎண்.72/2023/அ3

தீர்மானம் எண். : 540

தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 7 | அண்ணா வணிக வளாக கடை எண்.9ஐ திரு.வெங்கிடகிருஷ்ணன் என்பவர் நடத்தி வந்தார் 29.11.2021ல் நகராட்சி வசம் ஒப்படைத்துள்ளார். எனவே, அவர் செலுத்திய வைப்புத் தொகை திரும்ப வழங்க கோரியுள்ளார். காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடு 2020-2021 (2016-2017) பக்கம் எண்.24ல் ரூ.1,13,400/- பதிவு செய்யப்பட்டுள்ளது. நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வாடகைத் தொகை டிசம்பர் 2022, ஜனவரி -2022. பிப்ரவரி -2022 ஆகிய மூன்று மாத காலத்திற்கான தொகை ரூ.37,494/- யை காலம் கடந்த வைப்புத் தொகையில் பிடித்தம் செய்து மீதத் தொகை ரூ.75,906/- காலம் கடந்த வைப்புத் தொகையை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 3456/2022/சி2<br>தீர்மானம் எண். : 541<br>தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது. |
| 8 | பணியமைப்பு - நகராட்சி நிர்வாகம் - நகராட்சிகளியின் நிலைகளுக்குகேற்ப பணியிடங்களுக்கான வரையறை நிர்ணயம் செய்து அதற்கேற்ப புதிய பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் ஏற்கனவே உள்ள பணியிடங்களை முறைப்படுத்த வெளியிடப்பட்டுள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.1) துறையின் அரசாணை (நிலை) எண் 10 நாள் 23.01.2023 மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : பதிவு செய்யலாம்.<br>ந.க.எண். 360/2023/சி1<br>தீர்மானம் எண். : 542<br>தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது. |
| 9 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட மணி நகர் பகுதி வார்டு எண்.B பிளாக் எண்.32 டி.எஸ்.எண் : 72 மணி நகர் நகராட்சி பள்ளிக்கு எதிர்புறம் பகுதியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2022 - 2023ன் கீழ் அறிவுசார் மையம் கட்டப்பட்டு வருகின்றது. இந்த இடமானது பிரதான சாலை மட்டத்தை விட மிகவும் பள்ளமாக உள்ளது. இதனால் இடத்தினை சாலை மட்டத்தை விட உயர்த்த மண்கொட்டி உயர்த்த வேண்டியுள்ளது மற்றும் மேற்கு பகுதியில் தடுப்பு சுவர் (Retaining wall) கட்ட வேண்டியுள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்பப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் ஏற்கலாம். ந.க.எண். 1653/2022/இ1<br>தீர்மானம் எண். : 543<br>தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது. |
| 10 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 31 பாரதி நகர் பகுதியில் சிறுபாலம் கட்ட வேண்டியுள்ளது இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் ஏற்கலாம்<br>தீர்மானம் எண். : 544<br>தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 11 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண் 3 வள்ளுவர் நகரவை துவக்கப்பள்ளியில் புதியதாக கட்டப்பட்டுள்ள கழிப்பறைகளுக்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்த ஆகும் தோராய செலவினம் ரூ.7.00 இலட்சம் ஆகும் இச்செலவினத்தை நகராட்சியின் கல்வி நிதியில் மேற்க்கொள்ள மன்த்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2.மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர மன்றம் அனுமதி வழங்கலாம்<br>தீர்மானம் எண். : 545<br>தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது. |
| 12 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு எண் 15 வ.உ.சி. நகரவை துவக்கப்பள்ளியில் உள்ள கழிப்பிடத்தில் மேற்கூரை இல்லாததால் மாணவர்களுக்கு மிகவும் இடையூராக உள்ளது மற்றும் தண்ணீர் வசதி மற்றும் மின்சார வசதி போன்ற கூடுதல் வசதிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சம் ஆகும் இச்செலவினத்தை நகராட்சியின் கல்விநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலகக்குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அனுமதி ஏற்கலாம்.<br>தீர்மானம் எண். : 546<br>தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது. |
| 13 | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 33 வரை உள்ள ஆழ்துளை கிணறுகளில் உள்ள பழுதான நீர் மூழ்கி மோட்டரர்கள் காயில் ரீவைண்டிங் செய்யவும், பழுதான பம்புகள், ஸ்டாட்டர்கள், சர்வீஸ் ஓயர்கள் மாற்றவும் நீர் சேமிப்புத் தொட்டியில் இருந்து பைப்புகள் நீட்டிப்பு செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அனுமதி ஏற்கலாம்.<br>தீர்மானம் எண். : 547<br>தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 14 | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அவ்வப்போது ஏற்படும் பம்பிங்மெயின் மற்றும் பகிர்மானக்குழாய்கள் உடைப்பு சரிசெய்யவும், பகிர்மானக்குழாய்கள் பாரமரிப்பு செய்யவும் பொதுக்குழாய், பொதுக்கழிப்பிடங்களுக்குத் தேவையான உதிரிசாமான்கள் விநியோகம் செய்து இயக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அனுமதி ஏற்கலாம்.<br>**தீர்மானம் எண். : 548**<br>**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.** |
| 15 | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் புதிய குடிநீர்த் திட்டத்தில் 125 HP யூனிட் II இயங்கிக் கொண்டிருக்கிறது அதில் நீரேற்றம் குறைவாக இருப்பதால் மேல் நிலைத் தொட்டியில் நிரப்ப காலதாமதம் ஆவதால் நகரில் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது ஆதலால் மேற்படி பம்பில் இம்பள்ளர் தேய்வானதை புதிதாக வெல்டிங்செய்து , மறைதிருத்தி, புதிதாக கடைசல் வேலை செய்யவும், ஷாப்ட் மற்றும் புஸ்கள் மாற்றவும் மேலும் கே.கே நகர் மேல் நிலைத் தொட்டிக்கு நீரேற்றம் செய்யப்படும் 15HP பம்பில் பேரிங் போனதால் பேரிங் மற்றும் புஸ்கள் மாற்றவும் பங்களாமேடு நீரேற்று நிலையத்தில் உள்ள 30 HP பம்பின் புஸ்கள் பேரிங்கள் மற்றும் பம்பின் சிலிவ்கள் மாற்றவும் மற்றொரு பம்பை சரிசெய்யது இயக்கவும் பகிர்மான பகுதியில் உள்ள ஸ்பின்டில்ராடு மற்றும் செக்நட் மாற்றவும் ஷட்டர்கள் தேய்மானம் சரிசெய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அனுமதி ஏற்கலாம்.<br>**தீர்மானம் எண். : 549**<br>**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.** |
| 16 | மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண் 29 பள்ளத்துமேடு பகுதியில் உப்புநீர் வசதி செய்ய வேண்டியுள்ளது இதற்கு குழாய் விஸ்தரிப்பு செய்ய வேண்டியுள்ளது இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.50000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண். : 550**<br>**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.** |
| 17 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண் 15 பங்களா மேடு பகுதியில் பெண்கள் பொது கழிப்பிடம் சுமார் 30 வருடங்களுக்கு முன்னதாக கட்டப்பட்டது. மேற்குறிப்பிட்ட கழிப்பிடம் எவ்வித பயன்பாடுமின்றி மிகவும் சேதமடைந்து, இரவு நேரங்களில் சமூக சீர்கேடுகள் நடைபெறுகிறது. எனவே எவ்வித பயன்பாடும் இல்லாத மேற்குறிப்பிட்ட கழிப்பிடத்தை தற்போது இடித்து அகற்றி, இந்தியா திட்ட நிதியிலிருந்து பெற்று புதிதாக அமைக்க மன்றித்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண். : 551**<br>**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| 18 | இந்நகராட்சிக்குட்பட்ட வசந்தம் நகர் பழைய வார்டு எண் 32 புதிய வார்டு எண் 28 பகுதியில் மதிப்பீடு ரூ.50.00 இலட்சத்தில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2021 –2022 ன் கீழ் புதிய பூங்கா வைக்கப்பட்டுள்ளது. மூல மதிப்பிட்டில் உள்ள கீழ்க்கண்ட விளையாட்டு உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளது.<br>1. Seesaw 4 seate –1 எண்<br>2.Single side –1 எண்<br>3.Twin Swing 1 எண்<br>4.3 seater back slope granite stiff steet sitting bench –5 எண்<br>5. single seater granite stiff sitting round bench –5 எண்<br>இப்பகுதி மக்கள் மேற்கண்ட விளையாட்டு உபகரணங்கள் மிக குறைந்த அளவு எண்ணிக்கைகளில் உள்ளது என்றும், பெரிய பூங்காவாக உள்ளதனால் கூடுதலாக விளையாட்டு உபகரணங்கள் பொருத்திதருமாறு கேட்டதன் அடிப்படையில் கீழ்க்கண்ட விளையாடு உபகரணங்கள் வாங்கி பொருத்த வேண்டியுள்ளது.<br>1.Merry go round 6 seat –1 எண்<br>2.Seasaw 4 Seater– 1 எண்<br>3.Jungle gun –1 எண்<br>4. Bench –5 எண்<br>இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.90 இலட்சத்திற்கு மன்றித்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்தையும் மன்றம் ஏற்கலாம்<br>தீர்மானம் எண். : 552<br>தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது. |
| 19 | இந்நகராட்சி பொறியியல் பிரிவு வாகனம் எண்.TN40 AB 3445க்கு என்ற வாகனத்திற்கு நெம்பர் பிளேட், ஸ்டிக்கர் , கால்மிதி ஆகியவை மற்றும் இதர பொருட்கள் பொருத்தும் பணிக்கு 12.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.<br><table><tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தத் தொகை</th></tr><tr><td>1</td><td>திருவாளர். ஸ்ரீ பாக்கிய லட்சுமி மோட்டார்ஸ் ஒர்க்ஸ், ஈரோடு.</td><td>ரூ.28,000</td></tr><tr><td>2</td><td>திருவாளர்.முருகன் ஆட்டோஸ், மேட்டுப்பாளையம்</td><td>ரூ.25,700</td></tr></table>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். முருகன் ஆட்டோஸ் மேட்டுப்பாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.கஎண்.1306/2022/இ1<br>தீர்மானம் எண். : 553<br>தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது. |

20 மேட்டுப்பாளையம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2022– 2023ன் கீழ் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் மேட்டுப்பாளையம் நகராட்சி உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை நவீன முறையில் (Biomining) சுத்தம் செய்து உரக்கிடங்கினை புதுப்பிக்கும் பணி செய்தல் பணிக்கு ரூ.118.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதற்கிணங்க 06.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இணையதளம் மூலம் (Online) திருவாளர். ஸ்ரீ பொம்மு இன்டஸ்ட்ரீஸ் அவர்களும் மற்றும் Offline மூலம் திருவாளர் ஸ்ரீ. பொம்மு இண்டஸ்ட்ரீஸ் மற்றும் க்ரீன் பைன் எக்யூப்மென்ட்ஸ் என இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. மேற்காணும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி உறைகளில் தொழில் நுட்பத்தற்கான உறையினை மட்டும் (Technical Bid) 09.01.2023 அன்று கூர்ந்தாய்வு குழுவினர் முன்னிலையில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களில் இரண்டு ஒப்பந்ததாரர்களுமே தொழில்நுட்ப தகுதிகள் பெற்று இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள் உறையினை 10.01.2023 அன்று கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1. | மேட்டுப்பாளையம் நகராட்சி உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை நவீன முறையில் (Biomining) மூலம் சுத்தம் செய்து உரக்கிடங்கை புதுப்பிக்கும் பணி | ரூ.118.00 இலட்சம் | திருவாளர். ஸ்ரீ. பொம்மு இண்டஸ்ட்ரீஸ் | 4.90% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திருவாளர். க்ரீன் பைன் எக்யூப்மெண்டஸ் | 10.11 % மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற பணிகளுக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டிற்கு அதிகமாக 4.90% கொடுத்துள்ள திருவாளர். ஸ்ரீ. பொம்மு இண்டஸ்ட்ரீஸ், கோயமுத்தூர் அவர்களுக்கு விலைக்குறைப்பு செய்து தரக்கோரி 10.01.2023 கடிதம் அனுப்பப்பட்டு 11.01.2023 அன்று ஒப்பந்ததாரர் அவர்களின் கடிதத்தில் தற்போது டீசல் மற்றும் மூலப்பொருட்களின் விலை, வாகன வாடகை செலவு மற்றும் ஆட்கூலி உயர்வு ஆகியவை காரணமாக விலைக்குறைப்பு செய்து தர இயலாது என தெரிவித்தனர். மேலும் இரண்டாவது முறையாக விலைக்குறைப்பு செய்து தர கோரியதில் , ஒப்பந்தாரர் தனது ஒப்பந்தப்புள்ளியை 4.49 % சதவீதமாக குறைத்து கொடுக்க ஒப்புக்கொண்டார். மேலும் ஒப்பந்ததாரர் ஒப்புகொண்ட விகிதம் மதிப்பீட்டிற்கு அதிகமாக உள்ளதால் மீண்டும் விலைக்குறைப்பு செய்து தர கோரியதில் தாங்கள் கொடுத்துள்ள 4.49% விகித்திற்கே பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் விலைக்குறைப்பு செய்து தர இயலாது என தெரிவித்தனர்.

மேற்காணும் பணிக்கு 20.01.2023 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் முன்னிலையில் விலைக்குறைப்பு கூட்டத்தில் ஒப்பந்ததாரர் தங்களது ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டின் விகித்திற்கே பணிகளை மேற்கொள்ள ஒப்புகொண்டனர். மேலும் திருவாளர். ஸ்ரீ பொம்மு இண்டஸ்ட்ரீஸ் அவர்களுக்கு மதிப்பீட்டின் விகித்திற்கே பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

தீர்மானம் எண். : 554

தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.

21 மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொதுநிதி, கல்விநிதி, குடிநீர் நிதி 2022-2023ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 20.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | <u>கல்வி நிதி 2022-2023</u> வார்டு எண்.29ல் உள்ள மணிநகர் பள்ளியில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வகுப்பறைகளுக்கு கூடுதல் வசதி செய்தல் | ரூ.9.90 இலட்சம் | திரு.நாகராஜ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர். ஸ்ரீ ஆஸ்க் சுஸ்மா இன்ப்ராஸ்ட்ரக்டர்ஸ் | 4.97% மதிப்பீட்டிற்கு அதிகம். |
| 2 | <u>பொதுநிதி 2022- 2023</u> வார்டு எண்.31 பாரதி நகர் பகுதியில் சிறுபாலம் அமைத்தல் | ரூ.2.00 இலட்சம் | திரு. M.வேலுசாமி | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.C.நாகராஜ் | 4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | மேட்டுப்பாளையம் நகராட்சி சிராஜ் நகர் பகுதியில் அமைந்துள்ள நகராட்சி உரக்கிடங்கில் உள்ள Bio-methanation plant ல் மராமத்து பணி மேற்கொள்ளுதல் | ரூ.3.00 இலட்சம் | திரு.C.நாகராஜ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர். ஸ்ரீ ஆஸ்க் சுஸ்மா இன்ப்ராஸ்ட்ரக்டர்ஸ் | 5.02% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3 | <u>குடிநீர் நிதி 2022-2023</u> வார்டு எண்.10 டேன் இந்தியா காலனி பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தண்ணீர் வசதி ஏற்படுத்துதல் | ரூ.1.20 இலட்சம் | திருமதி. S.சுந்தரி | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர்.G.K.S சேதுபதி | 4.92% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | வார்டு எண்.31 கே.கே.நகர் பகுதியில் சின்டெக்ஸ் மேடை அமைத்தல் மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்துதல் | ரூ.1.90 இலட்சம் | திரு. N.ஜெகநாதன் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.V.செல்வராஜ் | 4.99% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். ந..க.எண்.1653/2022/இ1

தீர்மானம் எண். : 555

தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.

22 தலைமை நீரேற்று நிலையத்தில் பணியாற்றும் பணியாளர்களின் ஏப்ரல் 2022 முதல் டிசம்பர் 2022 வரை உண்டான ஒன்பது மாதங்களுக்கான மிகை நேரப்படி ரூ.3,00,897/—ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளர்களின் பெயர் | பதவியின் பெயர் | மிகை நேரப் பணி | | |
|---|---|---|---|---|---|
| | | | ஏப்ரல் 22 | மே 22 | ஜீன் 22 |
| 1 | எஸ்.மகேஸ்குமார் | மின்பணியாளர் நிலை – 1 | 40 | 48 | 32 |
| 2 | என்.கிருஷ்ணமூர்த்தி | கிளீனர் | 16 | 24 | 40 |
| 3 | கே.ரங்கராஜ் | கிளீனர் | 48 | 48 | 40 |
| 4 | எஸ்.புருஷோத்தமன் | உதவியாளர் | 48 | 56 | – |

| வ.எண் | ஜீலை 22 | ஆகஸ்ட் 22 | செப்டம்பர் 22 | அக்டோபர் 22 | நவம்பர் 22 | டிசம்பர் 22 |
|---|---|---|---|---|---|---|
| 1 | 40 | 56 | 24 | 40 | 40 | 40 |
| 2 | 40 | 56 | 32 | 56 | 32 | 48 |
| 3 | 40 | 56 | 32 | 56 | 32 | 32 |
| 4 | 24 | 56 | 24 | 56 | 32 | 40 |

தொகை ரூ

| வ.எண் | ஏப்ரல் 22 | மே 22 | ஜீன் 22 | ஜீலை 22 | ஆகஸ்ட் 22 |
|---|---|---|---|---|---|
| 1 | 11,637 | 13,514 | 9,310 | 11,262 | 16,127 |
| 2 | 3,249 | 4,716 | 8,122 | 7,860 | 11,256 |
| 3 | 9,563 | 9,254 | 7,969 | 7,712 | 11,044 |
| 4 | 7,231 | 8,164 | – | 3,499 | 8,351 |
| மொத்தம் | 31,680 | 35,648 | 25,401 | 30,333 | 46,778 |

| வ.எண் | செப்டம்பர் 22 | அக்டோபர் 22 | நவம்பர் 22 | டிசம்பர் 22 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | 7.142 | 11.520 | 11,904 | 11,520 | 1,03,936 |
| 2 | 6.646 | 11.504 | 6,843 | 9,933 | 70,129 |
| 3 | 6.521 | 11.360 | 6,718 | 6,501 | 76,642 |
| 4 | 3.698 | 8,351 | 4,931 | 5,965 | 50,190 |
| மொத்தம் | 24.007 | 42,735 | 30,396 | 33,919 | 3,00,897 |

(ரூபாய் மூன்று இலட்சத்து எண்ணூற்று தொன்னூற்றி எழு மட்டும்)

மிகை நேரப்படியினை ஆணையரே வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் 30.03.89ம் தேதிய ந.க.எண்.24372/89 ஒபி1 எண் கடிதத்தில் அதிகார அளிப்பு வழங்கப்பட்டுள்ளதால் ஏப்ரல் – 2022 முதல் டிசம்பர் –2022 வரை உண்டான ஒன்பது மாதங்களுக்கான மிகை நேரப்படி ரூ.3,00,897/—ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.5220/2011/இ1

**தீர்மானம் எண். : 556**

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| 23 | இந்நகராட்சியில் சிறப்பு சாலைகள் அமைக்கும் திட்டம் (SRP 2021 – 22)ன் கீழ் தொகை ரூ.595.00 இலட்சம் திட்ட நிதி மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.105.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.700.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுற்று திட்டநிதி TUFIDCO சென்னை 35லிருந்து முதல் தவணைத் தொகை ரூ.286.93 விடுவிக்கப்பட்டது. தற்போது இரண்டாவது தவணை தொகை விடுவிக்க கோரி கருத்துரு அனுப்பிவைப்பட்டமைக்கு ஆவணங்கள் ஆய்வு செய்த பின் TUFIDCO சென்னை 35 நிறுவனம் சிறப்பு சாலைகள் திட்டம் 2021 – 22 பாரத மாநில வங்கியில் கடன் பெற்று வழங்குவதாகவும் மேற்படி வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்ததின் அடிப்படையில் வங்கி வெளியிட்டுள்ள திருத்திய வட்டி விகிதமான 8.65% சதவீத வட்டியுடன் திரும்ப செலுத்த மன்ற ஒப்புதல் பெற்று அனுப்ப வரப்பெற்றுள்ள கடிதம் Lr.No TUFIDCO /SRP/M(B) 2022, நாள்.23.12.2022 கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேலும் திட்டத்தின் கீழ் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு முதல் தவணை தொகை ரூ.286.93 இலட்சம் பெறப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள தொகையினை திருத்திய வட்டி 8.65% விகிதத்தில் பெற்று வழங்கிடவும் பெறப்படும் கடன் தொகை போக மீதமுள்ள தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கவும்.<br>ந.க.எண்.4540/2020/இ1<br>**தீர்மானம் எண்.** : 557<br>**தீர்மானம்** : அங்கீகரிக்கப்பட்டது. |
| 24 | மேட்டுப்பாளையம் நகராட்சியில், சமுக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் அரசணை நாள் 27.07.,2022 படி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றத் பேரவை விதிகளின் விதி 110ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவுப்பில் அரசு தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது.<br>இதனையெடுத்து அரசாணை நிலை எண் 1 ன் கீழ் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் கூடுதலாக 433 மாநகராட்சி / நகராட்சி அரசு நடுநிலை மற்றும் உயர்நிலை பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் தொடக்கப்பள்ளி மாணவ மாவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டதினை விரிவுப்படுத்த அறிவு எனவே மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள பகவான் மஹாவீர் நகரவை உயர்நிலைப்பள்ளி சங்கர்நகர் மற்றும் மணிநகர் உயர்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு சுமார் (111+ 273) 384 மாணவர்களுக்கு கூடுதலாக காலை உணவுத் திட்டம் வழங்க, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளியாக 10.02..2023 அன்று ஒப்புந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்பட்டதையெடுத்து 10.02.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பபுந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. எனவே 13.02.2023 அன்று விலைப்புள்ளி உறையினை திறக்கப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சம்ர்ப்பிக்கப்படுகிறது. |

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒருநாள் ஒன்றுக்கு/ஒரு குழந்தைக்கு |
|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் பகவான் மஹாவீர் சங்கர் நகர் கேட்டரிங் சர்வீஸ் மற்றும் மணிநகர் உயர்நிலைப் பள்ளியில் மேட்டுப்பாளையம் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம். | திருவாளர் Naina கேட்டரிங் சர்வீஸ் மேட்டுப்பாளையம் | ரூ.12.70/- |
| | | திருவாளர். JuiceBox மேட்டுப்பாளையம் | ரூ.14.00/- |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் Naina கேட்டரிங்க சர்வீஸ், மேட்டுப்பாளையம் அவர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

தீர்மானம் எண். : 558

தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.

**25** மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொது நிதி மற்றும் கல்விநிதி 2022-2023ல் கீழ்க்கண்ட பணிகளுக்கு 03.02.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பு நோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமார்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | பொதுநிதி 2022-2023 வார்டு எண் 28 சுதாகாலனி பகுதியில் குழந்தைகள் நல மையத்திற்கு சிமெண்ட் கான்கிரட் தளம் சிறுபாலம் மற்றும் குடிநீர் வசதிகள் செய்தல் | ரூ.9.50 இலட்சம் | திருவலாளர் VRK கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.01 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவலாளர் G.K.S சேபதி | 4.98 % மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | அறிவுசார் மையம் கட்டும் இடத்தில் மண் நிரப்புதல் மற்றும் தடுப்பு சுவர் கட்டுதல் பணி | ரூ.9.50 இலட்சம் | திருவாளர் VEK கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவலாளர் G.K.S சேபதி | 4.95% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்க்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் VRK கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. .மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

தீர்மானம் எண். : 559

தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.

**26** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN40B 1497 க்கு (Dumper Plazer) தகுதிச் சான்று பெரும் பொருட்டு பழுது பார்க்கும் பணிக்கு 23.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எ ண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ |
|---|---|---|
| 1 | திருவாளர். ஸ்ரீ. பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ் , ஈரோடு | ரூ.2,88,900/- |
| 2 | திருவாளர். முருகன் ஆட்டோஸ், மேட்டுப்பாளையம். | ரூ.2,74,900/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர் முருகன் ஆட்டோஸ், மேட்டுப்பாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.** : 560

**தீர்மானம்** : அங்கீகரிக்கப்பட்டது.

**27** மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் 2022-2023 பொதுநிதி 2022-2023, கல்விநிதி 2022-2023ன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 17.02.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத் தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | குடிநீர் நிதி 2022-2023 தலைமை நீரேற்று நிலையத்திற்கு படிகாரம் (Sulphate of Alumina Ferric) வாங்குதல் | ரூ.3.60 இலட்சம் | திருவாளர் அல்கெம் இண்டஸ் ட்ரீஸ் | 0.52 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர் General Marketing Enteprises | 4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பம்பிங் மெயின் பகிர்மானக் குழாய் உடைப்பு சரிசெய்தல் | ரூ.5.00 இலட்சம் | திருவாளர் எம். வேலுசாமி | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர் சி.நாகராஜ் | 4.97 % மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3 | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நீர்மூழ்கி மோட்டார்கள் பழுது அகற்றுதல் | ரூ.5.00 | திருவாளர் எம்.வேலுசாமி | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர் சி.நாகராஜ் | 4.96% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 4 | தலைமைநீரேற்று நிலையத்தில் உள்ள புதிய குடிநீர்த்திட்டத்தில் 125 HP, 15HP பழுது அகற்றுதல் ஸ்பின்டில் ராடு மற்றும் செக்நெட் மாற்றுதல் | ரூ.5.00 | திருவாளர் அல்கெம் இண்டஸ் ட்ரீஸ் | 0.83% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர் General Marketing Enteprises | 4.99% மதிப்பீட்டிற்கு அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | வார்டு எண் 21 கெண்டையூர் சாலையில் கருப்பராயான கோவில் அருகில் ஆழ்துளை கிணற்றில் மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்தல் | ரூ.2.00 | திருவாளர் G.K.S சேதுபதி | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர் V.R.K கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 4.97% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 6 | பொதுநிதி 2022-2023 வார்டு எண் 15ல் வெங்கிடுசாமி சாலை வார்டு அலுவலகம் அருகில் மழைநீர் வடிகால் அமைத்தல் | ரூ.3.00 | திருவாளர் எம்.இன்ஜினியரிஸ் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர் G.K.S சேதுபதி | 4.96% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 7 | வார்டு எண் 17ல் குமார் கடை அருகில் சிறுபாலம் அமைத்தல் பணி | ரூ.3.00 இலட்சம் | திருவாளர் எம்.வேலுசாமி | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர் சி.நாகராஜ் | 4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 8 | வார்டு எண் 2 வெள்ளிப்பாளையம் சாலையில் உள்ள மழைநீர் வடிகால் மராமத்து பணிகள் செய்தல் | ரூ.1.00 | திருவாளர் எம்.வேலுசாமி | 0.01% மதிப்பீட்டி குறைவு |
| | | | திருவாளர் சி.நாகராஜ் | 4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 9 | வசந்தம் நகர் பூங்காவில் கூடுதல் விளையாட்டு உபகரணங்கள் பொருத்துதல் | ரூ.1.90 | திருவாளர் V.R.K கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர் G.K.S சேதுபதி | 4.95% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 10 | கல்விநிதி 2022-2023 வார்டு எண் 3 வள்ளுவர் நகரவை துவக்கப் பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கழிப்பறைகளுக்கு கூடுதல் வசதிகள் செய்தல் | ரூ.7.00 | திருவாளர் ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர் ஸ்ரீ ஆஸ்க்சுஷ்மா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 11 | வார்டு எண் 15 வ.உ.சி பள்ளியில் கூடுதல் வசதிகள் செய்தல் | ரூ.5.00 | திருவாளர் ஸ்ரீ அஸ்க்சுஷ்மா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.01% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திருவாளர் ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 4.96% மதிப்பீட்டிற்கு குறைவு |

மேற்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| | **அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>**தீர்மானம் எண். : 561**<br>**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.** |
| 28 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் குடிநீர் விநியோகம் செய்ய போதிய ஆட்கள் இல்லாததால் இப்பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள 21 நபர்களுக்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.378 நாள்: 28.06.2022 மூலம் அனுமதி பெறப்பட்டது. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. எம். வேலுசாமி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட ஒப்பந்தாராரின் ஒப்பந்த காலம் 31.01.2023 அன்று முடிவடைகிறது. எனவே குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று ஏற்கனவே இப்பணிகளை மேற்கொண்டு வருகிற திரு.எம்.வேலுசாமி ஒப்பந்ததாரர் 01.02.2023 முதல் 89 நாட்களுக்கு அதே விலை விகிதத்தில் பணி நீடிப்பு செய்து குடிநீர் பணிகளை மேற்கொள்ளவும் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்தையும் மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண். 368/2021/இ1<br>**தீர்மானம் எண். : 562**<br>**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.** |
| 29 | இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN40F 2273 க்கு (செப்டிக் டேங்கு வாகனம்) பேட்டரி பழுதடைந்துள்ளதால், புதிய பேட்டரி பொருத்தும் பணிக்கு 12.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. |

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ |
|---|---|---|
| 1 | திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு | ரூ.14, 800/- |
| 2 | திருவாளர் முருகன் ஆட்டோஸ், மேட்டுப்பாளையம். | ரூ.14,200/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர் முருகன் ஆட்டோஸ், மேட்டுப்பாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். : 563**

**தீர்மானம் : நிராகரிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| 30 | இந்நகர் மன்றத் தீர்மானம் எண்,460 நாள் 01.9.2022ல் முதல் சுய உதவிக்குழு மூலம் தூய்மை பணியாளர்களை கொண்டு இந்நகராட்சி பள்ளிகளில் தூய்மை பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண்.32050/16/ஜே1 நாள்.26/10/2017ல் நகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் சுகாதார முறையில் பயில பள்ளி வாளகம், பள்ளி கழிவறைகள் போன்றவைகளை தூய்மையாக வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது, இந்நகராட்சியில் போதிய தூய்மை பணியாளர்கள் இல்லை என்பதால், தற்போது பணிபுரிந்து வரும் சுய உதவிக்குழுவிற்கு 5.12.2022 முதல் 89 நாட்களுக்கு நீட்டிப்பு செய்யவும் அதற்கான தோராய செலவினம் (437X14X89=544502) ரூ.544502./-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்ற அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று 5.12.2022 முதல பணி மேற்கொள்ளவும் மன்றம் ஏற்கலாம்<br>**தீர்மானம் எண்.** : 564<br>**தீர்மானம்** : அங்கீகரிக்கப்பட்டது. |
| 31 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021 – 22ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட 12 இடங்களில் உள்ள சாலைகளை பேவர் பிளாக் (Paver block Road) சாலை அமைக்கும் பணி நடைபெற்று முடிவுறும் நிலையில் உள்ளது. இதில் அன்னூர் சாலை பகுதியில் பணி நடைபெற்று வருகிறது. இச்சாலையில் மழைநீர் வடிகாலில் நீர் கடந்து செல்ல சிறுபாலம் இல்லை. எனவே, சிறுபாலம் அமைத்தால் மட்டுமே தண்ணீர் சாலையை கடந்து செல்லும் மேற்கண்ட திட்ட மூலம் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படவில்லை. எனவே, RCC pipe Culvert அமைக்க வேண்டியுள்ள இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/– இலட்சத்திற்கு பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.** : 565<br>**தீர்மானம்** : அங்கீகரிக்கப்பட்டது. |
| 32 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN40M 9694 க்கு (TATA ACE) தகுதிச் சான்று பெறும் பொருட்டு பழுது பார்க்கும் பணிக்கு 23.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. |

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ |
|---|---|---|
| 1 | திருவாளர். ஸ்ரீ. பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ் , ஈரோடு | ரூ.2,30,000/– |
| 2 | திருவாளர். முருகன் ஆட்டோஸ், மேட்டுப்பாளையம். | ரூ.2,14,900/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர் முருகன் ஆட்டோஸ், மேட்டுப்பாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.** : 566

**தீர்மானம்** : அங்கீகரிக்கப்பட்டது.

<table>
<tr><td>33</td><td>இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN40M 9703 க்கு (TATA ACE) தகுதிச் சான்று பெரும் பொருட்டு பழுது பார்க்கும் பணிக்கு 23.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எ ண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தத் தொகை ரூ</th></tr>
<tr><td>1</td><td>திருவாளர். ஸ்ரீ. பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ் , ஈரோடு</td><td>ரூ.2,26,500/-</td></tr>
<tr><td>2</td><td>திருவாளர். முருகன் ஆட்டோஸ், மேட்டுப்பாளையம்.</td><td>ரூ.2,14, 800/-</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர் முருகன் ஆட்டோஸ், மேட்டுப்பாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு : அனுமதி வழங்கலாம்.<br>
தீர்மானம் எண். : 567<br>
தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>34</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 பகுதியில் இறந்தவர்களுக்கு சடங்கு (ஈமக்கிரியை) செய்யும் நந்தவனம் இடத்திற்கு தினந்தோறும் பொது மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து செல்கின்றனர். இந்த இடத்தில் கூடுதலாக கழிப்பிடம் கட்டி தருமாறு நந்தவன பொறுப்பாளர்கள் கடிதம் வாயிலாக கேட்டுள்ளார்கள் மற்றும் நகரமன்ற தலைவர், ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களும் கூடுதல் கழிப்பிடம் கட்ட நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி கழிப்பிடம் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>
தீர்மானம் எண். : 568<br>
தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>35</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணி மேற்கொள்ள DBC எனப்படும் களப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் தற்போது இந்நகராட்சியில் 20800 குடியிருப்புகள் உள்ளன. எனவே 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 68 பணியாளர்களை எஸ்.எஸ்.பவுண்டேசன் மூலம் பணிமேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டு 26.02.2023ம் தேதியில் முடிவடைவதால் மேற்க்கண்ட நிறுவத்திற்கே மேலும் 27.02.2023 முதல் 89 நாட்களுக்கு தொடர்ந்து பணி நீட்டிப்பு செய்யவும். அதற்கான – EPF & ESI சேர்த்து தோராய செலவீனம் ரூ.646.50 x 68 x 89 = 3912618/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>
தீர்மானம் எண். : 569<br>
தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.</td></tr>
</table>